# மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஓவியப் போட்டி

## பிப்ரவரி 2-ந்தேதி நடக்கிறது

சென்னை, ஜன.27-
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்காக ஓவியப் போட்டி வருகிற பிப்ரவரி மாதம் 2-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடத்தப்படுகிறது. இந்த போட்டி காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை நடைபெறும்.

சென்டிரல், எழும்பூர், செனாய் நகர், அண்ணா நகர் கோபுரம், கோயம்பேடு, வடபழனி, அசோக் நகர், பரங்கிமலை, விமான நிலையம், சைதாப்பேட்டை, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்கு, அரசினர் தோட்டம், மண்ணடி, வண்ணாரப்பேட்டை ஆகிய 15 மெட்ரோ ரெயில் நிலையங்களில் போட்டி நடத்தப்படுகிறது.

போட்டியில் சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிப்ரவரி மாதம் 9-ந்தேதி வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்க பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும். போட்டியில் கலந்துகொள்பவர்கள், போட்டிக்கு தேவையான கலைப் பொருட்களை தாங்களே கொண்டு வர வேண்டும்.

இந்த ஓவிய போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் www.chennaiartsschool.com என்ற இணையதளத்திலும், 7448822099 என்ற வாட்ஸ்-அப் எண் மூலமும் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.